கூடுதல் ஆணையர் (மாவ), நுண்ணறிவு-1, சென்னை-6 அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை திருமதி. க. லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,
இருப்பிடம் எண்.1, பே.அ.ப.வி. நினைவு கட்டிடம், கிரீம்ஸ் ரோடு, சென்னை-6.

ந.க. 1453 /2017/அ2, நாள் -12 .06.2019

பொருள் - பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - கூடுதல் ஆணையர்(மாவ), நுண்ணறிவு-1 - மறைந்த அலுவலக உதவியாளர் திரு. எஸ். சித்தானந்தம் அவர்களின் மகள் திருமதி. சி. தமிழரசி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரியது - ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை - 1) கூடுதல் தலைமைச் செயலர் / வணிகவரி ஆணையர், அவர்களின் கடித எண். ஒய்3/29438/2017, நாள் 20.03.2018.

2) இணை ஆணையர்(மாவ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் நக. 2962/17,அ6, நாள்-30.05.2019.

*******

ஆணை :-

பார்வை 2-ல் காணும் இணை ஆணையர்(மாவ) சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் செயல்முறை ஆணையின் மூலம் மறைந்த அலுவலக உதவியாளர் திரு. எஸ். சித்தானந்தம் அவர்களின் வாரிசுதாரர் திருமதி. சி. தமிழரசி அவர்கள் கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக ரூ.19,500-62,000/- என்ற ஊதிய விகிதத்தில் இவ்வலுவலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டார்.

(2) திருமதி. சி. தமிழரசி அவர்களுக்கு இவ்வலுவலகத்தில் சட்டம் மற்றும் சீராய்வு இருக்கையில் இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

(3) மேற்கண்ட பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது. மேலும், இவர் நிர்வாக காரணத்தின் பொருட்டு எந்த நேரத்திலும் எவ்வித முன்னறிவிப்பின்றி, பணியிலிருந்து நீக்கப்படலாம். தனியாளரின் பணி திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே பணி நியமனம் வரன்முறை செய்யப்படும்.

(4) தனியாளர் தனது தாய் மற்றும் பிற வாரிசுதாரர்களை பொறுப்புடன் காப்பாற்ற வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இப்பணி நியமனம் வழங்கப்படுகிறது.

(5) தனியாளரின் பணி நியமனம் தொடர்பான ஆவணங்களில் ஏதேனும் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் இருப்பின் தனியாளரின் பணி நியமனம் முற்றிலும் ரத்து செய்யப்படுவதோடு சட்டப்படி உரிய நடவடிக்கையும் எடுக்கப்படும்.

(6) திருமதி. சி. தமிழரசி அவர்கள், பணிநியமன அலுவலர் குறிப்பிடும் காலக்கெடுவில் பணியில் சேராதிருப்பின் அவரது பணிநியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி முற்றிலும் ரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(7) கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்படும் திருமதி. சி. தமிழரசி என்பவர் பணியில் சேரும்போது அரசு மருத்துவரிடமிருந்து பெறப்பட்ட உடற் தகுதி சான்றிதழினை சமர்ப்பிக்க வேண்டும்.

(8) தனியாளர் இந்த பணிநியமன ஆணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் பணியில் சேரவேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/- க. லட்சுமி பிரியா,
கூடுதல் ஆணையர்(மாவ),
நுண்ணறிவு-1, சென்னை-6.

பெறுநர்-

திருமதி. சி. தமிழரசி,
த/பெ.(லேட்) எஸ். சித்தானந்தம்,
எண்-162, 3வது தெரு,
B.V.காலனி, வியாசர்பாடி,
சென்னை-600 039.
(பதிவு அஞ்சலில் ஒப்புதல் அட்டையுடன்)

நகல்-

1) வணிகவரி ஆணையர், சென்னை-5 அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2) இணை ஆணையர்(மாவ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை-6.
3) துணை ஆணையர்(மாவ), புலனாய்வு-1, சென்னை-6.
4) இவ்வலுவலக உதவியாளர்கள்-அ2 மற்றும் அ5.
5) இருப்பு கோப்பு-1.

//உண்மை நகல்//

12/6/2019
நேர்முக உதவியாளர்.
12/6/19